பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
27 06 2025 **FRIDAY** 7 15 **PM**
வணக்கம், ஆகாஷவாணி - <u>செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

- ஆன்மிக யாத்ரிகர்களுக்கான ரயில் சேவை கடந்த 11 ஆண்டுகளில் விரிவுபடுத்தப்பட்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

- பெலாரஸ், தஜுகிஸ்தான் மற்றும் கஜகஸ்தான் நாடுகளுடனான பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தை பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் வலியுறுத்தியுள்ளார்.

- தீவிரவாதத்திற்கு எதிராக போராடுவது என்ற நிலைப்பாட்டில் இந்தியா உறுதியுடன் உள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

- தமிழகத்தில் மகளிர் சுயஉதவி குழுக்களின் உற்பத்திப் பொருட்களை மின்னணு வணிகம் மூலம் வெளிநாடுகளில் விற்பனை செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாநில அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.

- உஸ்பெகிஸ்தான் செஸ் சாம்பியன் பட்டத்தை இந்தியாவின் பிரக்ஞானந்தா வென்றுள்ளார்.

>>>>>><<<<<<<

ஆன்மிக யாத்ரிகர்களுக்கான ரயில் சேவை கடந்த 11 ஆண்டுகளில் விரிவுபடுத்தப்பட்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

ஒடிசாவில் மேற்கொள்ளப்பட்டு வரும் ரயில்வே வளர்ச்சித் திட்டங்கள் குறித்து சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ள பிரதமர், இம்மாநிலத்தில் ரயில்வே கட்டமைப்பு வரலாறு காணாத அளவில் மேம்படுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

ஆன்மிக சுற்றுலாப் பயணிகள் சிரமமின்றி கோவில்களுக்கு சென்று வழிபாடு செய்ய ரயில்வே பெரிதும் உதவுவதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<<

சிறு குறு நடுத்தர தொழில் கட்டமைப்பின் வளர்ச்சி நாட்டின் நீடித்த பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாதது என்று குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற சர்வதேச சிறு குறு நடுத்தர தொழில்கள் தினத்தை ஒட்டி நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்ட குடியரசுத்தலைவர், நாட்டின் பொருளாதாரத்தை தாங்கிப் பிடிக்கும் தூண்களாக சிறுதொழில்கள் அமைந்துள்ளதாக கூறினார்.

நாட்டின் உள்நாட்டு உற்பத்தியில் 30 சதவீதமும், உற்பத்திப் பொருட்கள் ஏற்றுமதியில் 45 சதவீதமும் சிறுதொழில்களின் பங்கு உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு மட்டுமின்றி, கிராமப்புற அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்தவும் இந்த தொழில்கள் பெரிதும் உதவிடுவதாக அவர் தெரிவித்தார்.

கிராமப்புற வேலைவாய்ப்புகளை உருவாக்குவதிலும், நலிவுற்ற மக்களின் பொருளாதார அதிகாரத்தை சிறுதொழில்கள் உறுதி செய்வதாகவும் குடியரசுத் தலைவர் கூறினார்.

வேளாண் தொழிலுக்குப் பிறகு இரண்டாவது பெரிய வேலைவாய்ப்பு வழங்கும் கட்டமைப்பாக சிறு குறு மற்றும் நடுத்தர தொழில்கள் அமைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டிற்கு மட்டுமின்றி உலகின் பொருளாதாரத்திற்கு வலுசேர்க்கும் முதுகெலும்பாகவும் சிறுதொழில்கள் உள்ளன என்று அவர் குறிப்பிட்டார்.

இந்த துறையில் அதிக அளவில் புதிய தொழில் முனைவோர் உருவாக்கப்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளதாகவும் குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு குறிப்பிட்டார்.

>>>>>><<<<<<

பெலாரஸ், தஜுகிஸ்தான் மற்றும் கஜகஸ்தான் நாடுகளுடனான பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தை பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் வலியுறுத்தியுள்ளார்.

சீனாவில் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் பாதுகாப்பு அமைச்சர்கள் மாநாட்டை ஒட்டி, இந்த மூன்று நாடுகளின் அமைச்சர்களை தனித்தனியாக சந்தித்து பேசிய அவர், பாதுகாப்பு உற்பத்தியில் இந்தியா தன்னிறைவை எட்டியுள்ளதாக தெரிவித்தார்.

பாதுகாப்பு உற்பத்தித் துறையில் பங்கேற்க இந்தியாவில் அதிக வாய்ப்புகள் உள்ளதை சுட்டிக்காட்டிய அவர், இந்த துறையில் முதலீடு செய்யுமாறும் கேட்டுக் கொண்டார்.

பஹல்காம் தீவிரவாத தாக்குதல் குறித்து அவர்களிடம் விளக்கிய திரு. ராஜ்நாத் சிங், ஆப்பரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கையின் மூலம் பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் வசமுள்ள கஷ்மீரில் இருந்த தீவிரவாத முகாம்கள் நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி அழிக்கப்பட்டதையும் சுட்டிக்காட்டினார்.

>>>>>><<<<<<<

தீவிரவாதத்திற்கு எதிராக போராடுவது என்ற நிலைப்பாட்டில் இந்தியா உறுதியுடன் இருப்பதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஷாங்காய் பாதுகாப்புத்துறை அமைச்சர்கள் கூட்டுப் பிரகடனத்தில் தீவிரவாதம் குறித்து குறிப்பிடாததன் காரணமாகத் தான் இந்தியா சார்பில் பாதுகாப்புத்துறை அமைச்சர் அதில் கையெழுத்திட மறுத்துவிட்டதாகவும் தெரிவித்தார்.

தீவிரவாதத்தை எதிர்த்து போராடுவதற்காகத் தான், ஷாங்காய் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஈரானின் வெளியுறவு அமைச்சர் திரு. சையத் அபாஸ் Araghchi -யிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, தற்போதைய நிலவரம் குறித்து கேட்டறிந்ததாகவும் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்தார்.

தற்போதைய சிக்கலான சூழ்நிலையை கருத்தில் கொண்டு, ஈரான் செயல்பட்டுள்ளதை தாம் பாராட்டுவதாகவும் அவர் தெரிவித்தார்.

சண்டை நடைபெறும் சூழ்நிலையிலும், ஈரானில் உள்ள இந்திய மக்களை பாதுகாப்பாக தாயகம் அனுப்ப உதவி செய்ததற்காக ஈரான் அமைச்சருக்கு, தாம் நன்றி தெரிவித்ததாகவும் திரு. ஜெய்சங்கர் கூறினார்.

>>>>>><<<<<<<

தமிழகத்திற்கு காவிரியில் அடுத்த மாதம் 31 புள்ளி இரண்டு நான்கு டிஎம்சி தண்ணீரை கர்நாடகா திறந்து விட வேண்டும் என்று காவிரி மேலாண்மை ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

ஆணையத்தின் தலைவர் திரு. எஸ்.கே. ஹல்தர் தலைமையில் இன்று புதுதில்லியில் நடைபெற்ற 41வது ஆய்வுக் கூட்டத்தில், எவ்வித தடையும் இன்றி தொடர்ந்து தண்ணீர் திறந்துவிடப்படுவதை கர்நாடகா உறுதி செய்ய வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

காணொலி வாயிலாக நடைபெற்ற இக்கூட்டத்தில் தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா மற்றும் புதுச்சேரியின் நீர்வளத்துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

>>>>>><<<<<<<

நடப்பாண்டில் கரும்பு உற்பத்தி 15 சதவீதம் அதிகரிக்கும் என்று தனியார் வேளாண் ஆய்வு முகமை மதிப்பீடு செய்துள்ளது.

அதில் மஹாராஷ்ட்ரா, கர்நாடகா மாநிலங்களில் கரும்பு உற்பத்தி அதிகரிக்கும் என்றும், நாட்டின் மொத்த கரும்பு உற்பத்தி 35 மில்லியன் டன்னை எட்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், நடப்பாண்டில் கரும்பு மற்றும் எத்தனால் உற்பத்தியும், ஏற்றுமதியும் அதிகரிக்கும் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

மொஸாம்பிக் நாட்டிற்கு 10 டீசல் எலெக்ட்ரிக் எஞ்சின்களை இந்தியா ஏற்றுமதி செய்யவுள்ளதாக ரயில்வே வாரியத்தின் தகவல் தொடர்பு துறை இயக்குநர் திரு. திலிப் குமார் தெரிவித்துள்ளார்.

அவர் எமது புதுதில்லி செய்திப்பிரிவுக்கு அளித்த பேட்டியில், 3 ஆயிரத்து 300 குதிரைத் திறன் கொண்ட இந்த நவீன டீசல் எலெக்ட்ரிக் ரயில் எஞ்சின்கள் தொழில்நுட்ப ரீதியாக மேம்படுத்தப்பட்டவை என்று குறிப்பிட்டுள்ளார்.

ரயில் எஞ்சினில் அதன் ஓட்டுநருக்கான அடிப்படை வசதிகள் செய்து தரப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த இரண்டு எஞ்சின்கள் இந்த மாதமே மொஸாம்பிக் நாட்டிற்கு அனுப்பப்படும் என்றும், எஞ்சியவை இம்மாத இறுதிக்குள் அனுப்பப்பட்டுவிடும் என்றும் திரு. திலிப் குமார் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

தலைநகர் தில்லியில் 100 மின்சாரப் பேருந்துகளை முதலமைச்சர் திருமதி. ரேகா குப்தா கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அவர், புகை மாசு இல்லாத இந்த வகை பேருந்துகள், மக்களின் சிரமத்தை குறைக்கும் நோக்கில் கொண்டுவரப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

தேவி என்றழைக்கப்படும் இந்த வகை பேருந்துகள், தலைநகரில் முக்கிய வழித்தடங்களில் இயக்கப்படும் என்றும் திருமதி. ரேகா குப்தா கூறினார்.

>>>>>><<<<<<

மாற்றுத் திறனாளிகள் மற்றும் மூத்த குடிமக்களுக்கு உதவும் வகையில் Sugamya பாரத் செல்ஃபோன் செயலியை மத்திய அரசு மேம்படுத்தியுள்ளது.

சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் இந்த செயலி மூலம், மூவாயிரத்திற்கும் மேற்பட்டோர் தங்கள் குறைகளை தெரிவித்து வருகின்றனர்.

கடந்த 2021ஆம் ஆண்டில் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்ட இந்த செயலி, தற்போது செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்துடன் மேம்படுத்தப்பட்டுள்ளது.

மாற்றுத் திறனாளிகள் மற்றும் முதியோர் தங்களுக்கான அரசின் திட்டங்கள் குறித்த விரிவான தகவல்களையும், இந்த செயலி மூலம் பெற முடியும் என்றும் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

ரோஜா வாசனையுடன் உருவாக்கப்பட்ட லிச்சி பழங்கள் முதன்முறையாக இன்று ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாக மத்திய வர்த்தக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

பஞ்சாப் மாநிலம் பதான்கோட்டிலிருந்து ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் கத்தார் நாடுகளுக்கு இன்று இந்த லிச்சிப் பழங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

கத்தார் நாட்டிற்கு ஒரு டன்னும், ஐக்கிய அரபு எமிரேட்ஸ்க்கு அரை டன்னும் இவை அனுப்பப்பட்டுள்ளன.

இந்த ஏற்றுமதி நாட்டின் பழங்கள் ஏற்றுமதியில் ஒரு முக்கிய நிகழ்வாக அமைந்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

லிச்சி பழங்களின் ஏற்றுமதி, இந்த பழங்களின் சாகுபடிக்கு புதிய வாய்ப்புகளை விவசாயிகளுக்கு ஏற்படுத்தி தந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

மின்னணு வணிகம் மூலம் மகளிர் சுயஉதவி குழுக்களின் உற்பத்திப் பொருட்களை வெளிநாடுகளில் விற்பனை செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக மாநில நிதியமைச்சர் திரு. தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.

விருதுநகர் மாவட்டம், காரியாபட்டியில் ஆயிரத்து 45 மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்களக்கு 40 கோடி ரூபாய் மதிப்பிலான வங்கிக் கடனுதவியை வழங்கிப் பேசிய அவர், மகளிர் ஒன்றுபட்டு, ஆக்கபூர்வமான தொழில்களில் ஈடுபட்டு, தங்களின் வாழ்வாதாரத்தையும் கிராமப்புற பொருளாதாரத்தையும் உயர்த்தி வருவதாகவும் குறிப்பிட்டார்.

மாநிலத்தில் உள்ள 45 சதவீத தொழிற்சாலைகளில் பெண்கள் மட்டுமே வேலை செய்து வருவதாகவும் அவர் கூறினார்.

மகளிர் சுயஉதவி குழுக்களின் வளர்ச்சிக்கு மாநில அரசு எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருவதாகவும் திரு. தங்கம் தென்னரசு தெரிவித்தார்.

>>>>>><<<<<<<

மங்கோலியாவில் தட்டம்மை நோயால் இன்று மேலும் 200 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டின் சுகாதாரத்துறையின் தொற்றுநோய் பிரிவு தெரிவித்துள்ளது.

பள்ளிக் குழந்தைகள் அதிக அளவில் பாதிப்புக்கு உள்ளானதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிக அளவில் பரவக்கூடிய வைரஸ் தொற்று என்று தட்டம்மையை உலக சுகாதார நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

சுவாசக் காற்று மற்றும் தும்மல் மூலம் இது பரவக்கூடியது என்றும், அதிக பாதிப்பு ஏற்படும் போது உயிரிழப்பும் ஏற்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நோயை கட்டுக்குள் வைப்பதற்கு தடுப்பூசி போடும் பணியையும் மங்கோலிய அரசு தீவிரப்படுத்தியுள்ளது.

கடந்த ஆண்டு இந்நாட்டில் தட்டம்மை நோய் பாதிப்பால் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததாகவும், இதில் அதிகம் பேர் 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் என்றும் உலக சுகாதார நிறுவனம் கூறியுள்ளது.

>>>>>><<<<<<<

உஸ்பெகிஸ்தான் செஸ் சாம்பியன் பட்டத்தை இந்தியாவின் பிரக்ஞானந்தா வென்றுள்ளார்.

இப்போட்டியில் மூன்று வீரர்கள் 5 புள்ளி ஐந்து புள்ளிகளுடன் முன்னிலை வகித்ததால், டை பிரேக்கர் முறை பின்பற்றப்பட்டது. இதில் பிரக்ஞானந்தா ஒன்று புள்ளி ஐந்து புள்ளிகள் பெற்று பட்டத்தை வென்றார்.

>>>>>><<<<<<<

இங்கிலாந்துக்கு எதிரான 19 வயதுக்குட்பட்டோருக்கான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 175 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடி வரும் இந்தியா சற்றுமுன்வரை 3 ஓவரில் விக்கெட் இழப்பின்றி 23 ரன் எடுத்துள்ளது.

Hove-வில் நடைபெற்று வரும் இப்போட்டியில் முதலில் விளையாடிய இங்கிலாந்து அணி 42 புள்ளி இரண்டு ஓவரில் 174 ரன் எடுத்து ஆட்டமிழந்தது.

>>>>>>END<<<<<<